2013 ஏப்ரல் 8]

வருகின்றபட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "கனிவுடன் பரிசீலிக்கப்படும்" என்ற நல்ல தகவலைத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

174—

போக்குவரத்துப் பணிமனை

***24848—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டம், அனந்தபுரம் பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டத்தின் சார்பில் விக்கிரவாண்டி தொகுதி, அனந்தபுரம் பகுதியில் புதிய பணிமனை அமைப்பதற்காக செஞ்சி

வட்டம், சித்தரசூர் கிராமத்தில் 2.2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, வருவாய்த் துறையிடமிருந்து முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, புதிய பணிமனை அமைப்பதற்கான பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் கோட்டத்திற்குட்பட்ட அனந்தபுரம் பகுதியில் பணிமனை அமைக்கப்படும் என்று சொன்னால், அதனால் பெருமளவில் பயன்பெறக்கூடிய மக்கள் நான் சார்ந்திருக்கின்ற விக்கிரவாண்டி தொகுதி மக்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரியப்படுத்த விரும்புகிறேன்.

நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் உண்மை; மாவட்ட ஆட்சித் தலைவர் enter upon permission கொடுத்திருக்கிறார் என்பதும் உண்மை. தனியார் ஆக்கிரமிப்பைத் தவிர்ப்பதற்கு ஒரு fencing போடுவது அல்லது அடுத்தகட்ட நடவடிக்கையான பணிமனை தொடங்குவதற்கான ஏற்பாடு காலதாமதம் ஆகிவருகிறது என்பதுதான் கவலைக்குரிய விஷயம். எனவே, உடனடியாக பணிமனை பணிகளைத் தொடங்கி, விரைவில் முடித்துத் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர், எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டத்தில் மட்டும் எட்டு புதிய பணிமனைகள் அமைப்பதற்கு உத்தரவிட்டு, இப்பொழுது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 8]

அதோடு சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அனந்தபுரம் பகுதி பணிமனையினுடைய ஆக்கிரமிப்பு என்பது முந்தைய ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டவை. அபகரிப்பு, ஆக்கிரமிப்புகள் எல்லாம் முந்தைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் நடைபெற்றவைதான். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, பணிமனையினைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, அங்கு புதிய பணிமனை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***20084—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*